# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>சுவாமி விவேகானந்தா கலாசார நிலைய ஒழுங்கமைப்பில் *My Red Comrade* திரையிடல் மற்றும் இயக்குனர் சுதத் மஹாதிவுல்வேவாவுடனான கலந்துரையாடல்</u>**

2024 இல் வெளிவந்த இலங்கை திரைப்படமான “மை ரெட் கொம்ரேட் ***(My Red Comrade)”*** திரையிடலுடன், கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் (SVCC) நடத்தும் சந்திப்போம் வாழ்த்துவோம் தொடரின் மற்றொரு பதிப்பு நடைபெற்றிருந்தது, படத்தின் இயக்குனரும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவருமான சுதத் மஹாதிவுல்வேவாவுடன் ஓர் உற்சாகமான கலந்துரையாடல் அமர்வும் இதன் அங்கமாக நடைபெற்றது.

2. திரைப்பட ஆர்வலர்கள், மாணவர்கள் மற்றும் கலாசார ஆர்வலர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வு, சினிமா, அரசியல் மற்றும் கதைகூறல் பற்றிய அர்த்தமுள்ள உரையாடலுக்கான தளத்தை வழங்கியது. துணிச்சலான கதை மற்றும் சமூக-அரசியல் கருத்துகளுக்கு பெயர் பெற்ற “மை ரெட் கொம்ரேட், இரசிகர்கள் மீது ஒரு வலுவான தாக்கத்தை ஏற்படுத்தியது. திரையிடலுக்குப் பின்னரான கலந்துரையாடல் திரு. மஹாதிவுல்வேவாவுடன் நடைபெற்றதுடன், திரைப்படத் தயாரிப்பாளரின் இத்துறைசார்ந்த பயணம் மற்றும் இன்றைய சமூக-கலாசார சூழலில் இப்படத்தின் பொருத்தப்பாடு பற்றிய பெறுமதிமிக்க நுண்ணறிவுகளை அக்கலந்துரையாடல் வழங்கியது.

3. மார்ச் 2025 இல் நடைபெற்ற வெற்றிகரமான சந்திப்போம் வாழ்த்துவோம் நிகழ்வைத் தொடர்ந்து இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளதுடன், முன்னைய அந்நிகழ்வில் புகழ்பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் திரு பிரசன்ன விதானகே பங்கேற்றதுடன் அவரது விமர்சன ரீதியாகப் பாராட்டப்பட்ட திரைப்படமான பரடைஸ் திரையிடப்பட்டது. SVCC இன் சந்திப்போம் வாழ்த்துவோம் தொடர் கலாசார பரிமாற்றத்திற்கான ஒரு துடிப்பான முன்னெடுப்பாக தொடர்ந்து செயல்படுகிறது, இதன் மூலமாக இலங்கை சினிமா பிரபலங்கள் இரசிகர்களைச் சந்திக்கும் வாய்ப்புகளும் உருவாகின்றன.

4. இந்திய சினிமாவின் சிறப்பை வெளிப்படுத்தும் அதன் வழக்கமான முயற்சியின் ஒரு பகுதியாக SVCC இந்திய கதைகூறலின்

பன்முகத்தன்மை மற்றும் ஆழத்தை பிரதிபலிக்கும் காலத்தால் அழியாத மற்றும் சமகால தலைசிறந்த படைப்புகளை தொடர்ந்து திரையிடுகிறது. 2025 மே 02 ஆம் திகதி அன்று, புகழ்பெற்ற மலையாள திரைப்படத் தயாரிப்பாளர் ஷாஜி என். கருணுக்கு மரியாதை செலுத்தும் முகமாக SVCC சர்வதேச அளவில் பாராட்டப்பட்ட அவரது முதல் படமான பிறவி திரைப்படத்தை திரையிட்டிருந்தது. இந்த உணர்ச்சிகரமான மற்றும் சக்திவாய்ந்த கதை பார்வையாளர்கள் மத்தியில் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தியது, கற்பனைக் கவிதைகள் மற்றும் மனித உணர்ச்சியின் விற்பன்னர் என்ற என். கருணின் அந்தஸ்தை அது மீண்டும் உறுதிப்படுத்தியது.

******

**கொழும்பு**
**09 மே 2025**